# சைவமும் தமிழும்

**கார்த்திகா.மு.சி, வினோதினி. பி, & வி .கோபிநாத்**
**உளவியல் துறை,**
**பூ.சா.கோ.அர.கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி ,கோவை**

**7**

**ஆய்வு நோக்கம்**:

பல்வேறு சமயங்கள் இருப்பினும் சைவ சமயம் எந்த வகையில் தமிழ் வளர்ச்சிக்கு தொண்டாற்றியுள்ளது என்பதை மட்டுமே ஆய்வது இக்கட்டுரையின் நோக்கம்.

**ஆய்வுச் சுருக்கம்:**

சமயம் என்பது மனித சமுதாயத்தை நல்வழியில் வாழ வழி காட்டுகிறது ஆனால் உலகில் உள்ள அனைவருக்கும் ஒரே சமயம் என்ற நிலை இல்லை. ஆனால் அனைத்து சமயங்களுக்கும் பொதுவான நோக்கம் இறைவழிபாடு. அன்பே சிவம் என்ற தாரக மந்திரம் சைவ சமயத்தின் ஆணிவேர். இந்த சமய கொள்கைகள், கோட்பாடுகள் வழிமுறைகள், நெறிகள் பழக்கவழக்கங்கள் போன்றவற்றை பரப்பும் மனிதனிடம் செல்லவும் மொழி என்ற கருவி தேவைப்படுகிறது. ஒரு மொழி வளர்ந்து புகழ்ச்சி அடைய வைப்பது மனிதனால் மட்டுமே முடியும் மொழி வளம் பெருக பெருக மனிதனின் சிந்தனைகள் உருவாக்கும். உயர்தனி செம்மொழியாகிய தமிழும் சைவமும் சிறப்புடன் பொலிவு பெற சைவ சான்றோர்கள் பலர் பாடுபட்டுள்ளனர். அதில் ஒருவரான சேக்கிழார் எழுதிய புராணம் தமிழ் வளர்ச்சிக்கு ஆற்றிய பங்கினை பற்றி விரிவாக காண்போம்.

**திறவுச் சொற்கள்**:

கைலாசபதி; கைலாய மலை; கரிஷ்மா; சைவ அடியார்கள்; பரமசிவன்

**முன்னுரை**:

பெரியபுராணம் இயற்றியவர் சேக்கிழார் ஆவார் இவர் சைவ சமயத்தை பற்றி புகழ்ந்து அழகிய செந்தமிழ் பாடல்களைப் பாடியுள்ளார். இவையெல்லாம் சிவபெருமானை போற்றி பாடும் பாடல்கள் ஆகும். சிவபெருமானின் 64 திருவிளையாடல்களையும் கதை வாயிலாக விளக்கியுள்ளார். சேக்கிழார் 63 நாயன்மார்களுள் ஒருவர் ஆவார். சிவபெருமானின் அடிகளாராக விளங்கிய 63 நாயன்மார்கள் சிவபெருமானின் புகழை இவ்வுலகத்திற்கு பரப்ப சைவ வழியை உருவாக்கினார்கள். சிவபெருமானை பரமசிவன் என்று சைவ முறையில் அழைத்தார்கள். திருத்தொண்டர், திருவந்தாதி ஆகியவற்றை மூல நூல்களாகவும், இரண்டாம் குலோத்துங்க சோழனிடம் அமைச்சராக இருந்த சேக்கிழார் பல ஊர்களுக்குச் சென்று செய்திகளைத் திரட்டி பெரிய புராணத்தை இயற்றினார். பல காலங்களுக்கு முன்பு சேக்கிழாரை இரண்டாம் குலோத்துங்க சோழன் தில்லை என்னும் தளத்திற்கு செல்லப் பிறபித்த ஆணையை தொடர்ந்து தில்லைக்குச் சென்று அங்கிருக்கும் இறைவனான நடராசர்" உல கெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன் " என உணர்ந்து பெரியபுராணத்தை இயற்ற தொடங்கியதாக

நம்பப்படுகிறது. இந்த காப்பிய கதையானது கைலாயத்தில் தொடங்கி சைவ அடியார்களின் வாழ்க்கையை விவரித்து இறுதியாக மீண்டும் கைலாயத்தில் முடிகிறது. இதில் இரண்டு காண்டங்கள் உள்ளன. முதல் காண்டம் 5 சறுக்கங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. அவை

1. திருமலைச் சருக்கம்,
2. தில்லை வாழ் அந்தணர் சருக்கம்,
3. இலை மலிந்த சருக்கம்,
4. மும்மையால் உலகாண்ட சருக்கம்,
5. திருநின்ற சருக்கம்

இரண்டாம் காண்டத்தில் 8 சறுக்கங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. அவை

1. வம்பறா வரிவண்டுச் சருக்கம்
2. வார்கொண்ட வனமுலையாள் சருக்கம்
3. பொய்யடிமையில்லாத புலவர் சருக்கம்
4. கறைகண்டன் சருக்கம்
5. கடல் சூழ்ந்த சருக்கம்
6. பத்தராய்ப் பணிவார் சருக்கம்
7. மன்னிய சீர்க் சருக்கம்
8. வெள்ளானைச் சருக்கம்

இத்தகைய சிறப்புமிக்க நூலில் இடம் பெற்றுள்ள முதல் காண்டத்தில் உள்ள திருமலை சருக்கம் என்னும் பகுதியில் உள்ள முதல் பத்து பாடல்கள் எவ்வாறு தமிழில் வளர்ச்சிக்கு பங்காற்றியது என்பதை கீழ் கண்ட கட்டுரையில் காண்போம்.

**திருமலைச் சிறப்பு**

பெரியபுராணத்தின் முதற் பகுதியாகிய திருமலைச் சருக்கம்

1. பாயிரம்
2. திருமலைச் சிறப்பு
3. திருநாட்டுச் சிறப்பு
4. திருநகரச் சிறப்பு
5. திருக்கூட்டச் சிறப்பு
6. தடுத்தாட் கொண்டபுராணம்

என்ற ஆறு உட்பகுதிகளையும், 344 பாடல்களையும் கொண்டு நடையிடுகிறது. காப்புப்பகுதியில் முதல் இரண்டு பாடல்கள் தில்லைக் கூத்தனையும், மூன்றாவது பாடல் விநாயகனையும் வணங்குவதாக அமைந்துள்ளது.

கீழ் கண்ட கட்டுரையில் திருமலைச்சிறப்பில் இடம் பெற்றுள்ள சில பாடல்களைப் பற்றி காண்போம்.

**திருமலைச் சிறப்பு முதல் பாடல்**

"பொன்னின் வெண்திரு நீறு புனைந்தெனப்

பன்னும் நீள்பனி மால்வரைப் பாவது

தன்னை யார்க்கும் அறிவரி யான்என்றும்

மன்னி வாழ்கயி லைத்திரு மாமலை."

திருமலை சிறப்பின் முதல் பாடலான இது சிவபெருமானின் நிலை மாற வலிமையை பற்றி கூறியுள்ளது இப்பாடலின் பொருளானது தங்கத்தின் மேல் வெள்ளை நிற திருநீற்றை பூசிக்கொண்டு நிலைபெற்று விளங்கும் அளவற்ற உயரத்தையும் பெருமையும் பெற்று விளங்கும் இமயமலை ஒரு பக்கமும் மறுபக்கம் எவருக்கும் தன்னை தெரிந்து கொள்ள முடியாத உலக மக்கள் பலரால் விரும்பப்படும் தவன் ஆகிய கைலாசபதி பரமசிவன் எந்த காலத்திலும் நிலை பெற்று வாழ்கின்ற கைலாசம் என்னும் அழகையும் பெருமையும் பெற்ற மாமலை கைலாய மலை.

**திருமலைச் சிறப்பு இரண்டாம் பாடல்**

" அண்ணல் வீற்றிருக் கப்பெற்ற தாதலின்

நண்ணும் மூன்றுல கும்நான் மறைகளும்

எண்ணில் மாதவம் செய்யவந் தெய்திய

புண்ணி யந்திரண் டுள்ளது போன்றது."

தலைவனாகிய கைலாசபதி அமர்ந்திருக்கும் புகழையும் பாக்கியத்தையும் பெற்றது இமயமலை ஆகையால் பிரபஞ்சத்தில் இருக்கும் அந்தர் மத்திய பாதளம் என்று மூன்று உலகங்களில் வாழ்பவர்களுக்கு நான்கு வேதங்களை ரிக் யஜுர் சாம அதர்வன வேதம் ஆகியவற்றை கணக்கு இல்லாததும் பெருமையை பெற்று விளங்கும் தவத்தை புரிந்ததால் வந்து சேர்ந்த புண்ணிய செயல்கள் யாவும் ஒருசேர திரண்டு இருப்பதைப் போல விளங்குவது திருக்கைலாயம் மாலை ஆகும்.

**திருமலைச் சிறப்பு மூன்றாம் பாடல்**

" நிலவும் எண்ணில் தலங்களும் நீடொளி

இலகு தண்தளிர் ஆக எழுந்ததோர்

உலகம் என்னும் ஒளிமணி வல்லிமேல்

மலரும் வெண்மலர் போல்வதம் மால்வரை."

இவ்வுலகில் இருந்து சிறப்பாக விளங்கும் எண்ணற்ற சிவத்தலங்களிலும் அவை விரிந்து கொண்டு சேர்த்து பிரகாசமாக விளங்கும் குளிர்ச்சியைப் பெற்ற திருகு சுருள் வில்லாகவும் எழுந்ததாகிய ஓர் உலகம் ஏற்று வழங்கும் ஒளியை பெற்ற மாணிக்க கொடியின் மேல் மலர்கின்ற வெள்ளை நிற மலர்களைப் போல் விளங்குகிறது பெருமைக்குரிய கைலாயம் மாலை.

**திருமலைச் சிறப்பு எட்டாம் பாடல்**

" காதில்வெண் குழையோன் கழல்தொழ நெடியோன்

காலம்பார்த் திருந்ததும் அறியான்

சோதிவெண் கயிலைத் தாழ்வரை முழையில்
துதிக்கையோன் ஊர்தியைக் கண்டு
மீதெழு பண்டைச் செஞ்சுடர் இன்று
வெண்சுட ரானதென் றதன்கீழ்
ஆதிர னமதாய் இடக்கலுற் றான்என்
றதனைவந் தணைதரும் கலுழன்'.

தன்னுடைய செவிகளில் வெள்ளை நிறத்தைப் பெற்ற சங்குக் குழைகளை அணிந்தவனாகிய கைலாச பதியினுடைய வீரக்கழலைப் பூண்ட திருவடிகளை வணங்குவதன்பொருட்டு உயரமான திருவுருவத்தைக் கொண்ட திருமால் உரிய நேரத்தை எதிர்பார்த்துக் கொண்டு காத்திருந்ததையும் தெரிந்து கொள்ளாதவனாகி வெண்மையான ஒளிவெள்ளத்தை மலையினுடைய அடிவாரத்தில் உள்ள வீசும் கயிலாய ஒரு குகையில் துதிக்கையை உடையவனாகிய விநாயகப் பெருமானுடைய வாகனமாகிய மூஷிகத்தைப் பார்த்து வானத்தின்மேல் எழுந்து செல்லும் பழையவனும், சிவந்த கிரணங்களைப் பெற்றவனுமாகிய சூரியன்: இன்றைக்கு நிறத்தைக் கொண்ட நிலாவை வீசும் வெள்ளை சந்திரனாகி விட்டான் என்று எண்ணி, அந்தக் கயிலாய மலையின் அடியில் தான் முன்காலத்தில் கொண்டு பன்றியினுடைய வடிவத்தைப் பெற்றவனாக மாறிக் கயிலாய மலையைத் தோண்டலானான் என்று எண்ணி அந்தத் திருமாலி னுடைய வாகனமாகிய கருடன் அந்தப் பன்றியினிடம் வந்து சேர்வானானான்.'

**திருமலைச் சிறப்பு பதினோராம் பாடல்**

"நெற்றியிற் கண்ணர் நாற்பெருந் தோளர்
நீறணி மேனியர் அனேகர்
பெற்றமேற் கொண்ட தம்பிரான் அடியார்
பிஞ்ஞகன் தன்னருள் பெறுவார்
மற்றவர்க் கெல்லாம் தலைமையாம் பணியும்
மலர்க்கையில் சுரிகையும் பிரம்பும்
கற்றைவார் சடையான் அருளினால் பெற்றான்
காப்பதக் கயிலைமால் வரைதான்."

பெரிய தோள்களையும் நெற்றியில் ஒற்றை கண்ணையும் தனது உடம்பில் விபூதியை பூசிக்கொண்டு இருப்பவர்கள் பலர் இடம வாகனத்தில் மேல் அமர்ந்து அருள் புரிந்த கைலாசநாதரின் அடியவர்களுக்கும் பின்னிய சதாபாரத்தை தன்னுடைய தலையின் மேல் சுமந்து கொண்டிருக்கும் சிவபெருமானின் திருவருளை எதிர்பார்த்து வந்தவர்களுக்கும் மற்றவர்களுக்கும் தலைமை பதவியை வகிக்கும் வேலையையும் தன்னுடைய கரங்களில் உடைவாளையும் பிரம்பையும் கற்றையாக நீண்ட சடாமுடியை தலையின் மேல் உள்ள கைலாசபதி வழங்கிய திருவருளால் பெற்று விலங்குகின்றவனும் ஆகிய நந்தியம் பெருமான் காவல் புரிவது அந்த கைலாயம் என்று என்று பெருமையை பெற்ற மலை.

**உளவியல் சிந்தனைகள்:**

கரிஷ்மா என்றால் மற்றவர்களைத் தன்பால் ஈர்த்து அவர்கள் மீது தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய, சிலரிடம் காணப்படும் ஓர் ஆற்றல் மிக்க தனிப்பண்பு.பெரிய புராணம் தமிழ் நிலங்களின் அறுபத்து மூன்று பண்டைய சைவ துறவிகளின் வாழ்க்கையை விவரிக்கிறது . இதில் பலர் (charisma) என்ற ஆளுமையை பெற்றவர்களாக இருக்கலாம் என்று நம்பப்படுகிறது.ஆகையால் சேக்கிழார் கரிஷ்மா என்னும் ஆற்றலை மொழியின் வாயிலாக வெளிபடுத்தி மக்களை ஈர்த்து தமிழை வளர்த்தார் என்று நம்பலாம்.

**முடிவுரை ;**

பெரியபுராணத்தை இயற்றிய சேக்கிழார்க்கு இணை அவரே ஆகையால் அவரைத் தவிர பெரியபுராணத்திற்கு வேறு யாரும் விளக்கம் கொடுக்க இயலாது என்ற போதிலும் இக்கட்டுரையானது வாசகர்களுக்கு பெரியபுராணத்தில் வெளிப்படும் வாழ்க்கை நெறிகளை விவரிக்கும் முயற்சி செய்துள்ளது. முதல் நிலையில் பெரியபுராணம் தமிழ் மொழியின் தனிச்சிறப்பு தமிழ் பண்பாடு தமிழர் சமயம் தமிழர் வளர்ச்சி ஆகியவற்றை விளக்குகிறது. பெரியபுராணம் தமிழ் சைவ அடியார்கள் தமிழ் வழிபாட்டின் மூலம் அளப்பரிய ஆற்றலை அடையப்பெற்றமையை ஆதாரத்தோடு முன்வைக்கிறது இவ்வுலகை விட்டு நீங்கும்போது வாழ்க்கையைப் பற்றிய எவ்வித பயமும் இல்லாமை மற்றும் இறைவன் மீது முழுமையான நம்பிக்கை ஆகியனவே வாழ்க்கையின் நிறைவாக பெரியபுராணம் முன்வைக்கிறது. இவ்வாறு பெரியபுராணத்தில் இடம்பெற்றுள்ள பாடல்களை அரச சபைகளிலும் கோவில்களிலும் மக்களிடத்தில் பாடப்பட்டு புகழ் பெற்று தமிழை வளர்த்தியது.

**துணைநூற்பட்டியல்:**

1)பெரிய புராண;விளக்கம் ;பகுதி-1;கி.வா. ஜகந்நாதன்

2) https://www.valaitamil.com/tamil-and-samayam_6859.html

3) https://www.ncbi.nlm.nih.gov/pmc/articles/PMC2755138/

4)https://ta.m.wikipedia.org/wiki/%E0%AE%AA%E0%AF%86%E0%AE%B0%E0%AE%BF%E0%AE%AF%E0%AE%AA%E0%AF%81%E0%AE%B0%E0%AE%BE%E0%AE%A3%E0%AE%AE%E0%AF%8D

https://ta.m.wikipedia.org/wiki/%E0%AE%9A%E0%AF%87%E0%AE%95%E0%AF%8D%E0%AE%95%E0%AE%BF%E0%AE%B4%E0%AE%BE%E0%AE%B0%E0%AF%8D

5) https://youtu.be/4rXFs9u7uwg?si=idaf9apizpUubwue

6) https://youtu.be/ou7haWvrUow?si=LcnfDDCS3my5VHvi

7) https://youtu.be/fM20b2hw3Mk?si=mJXGdxD5n1fLN2RT

8) https://youtu.be/QOfZCYro5lw?si=igCTTWxg2pmZiZuN

9) https://youtu.be/QL9AAtMVXlM?si=0rnzVelPoveBDKtx

10) https://dictionary.apa.org/charisma